தமிழ்நாடு வனசீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்
TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE
(TNFUSRC)
8வது மாடி கீழ் தளம், எண்.01, ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–600 015.
8thDown Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet, Chennai - 600 015.
Phone No. / தொலைபேசி எண். 044-24341251Website : www.forests.tn.gov.in

# DIRECT RECRUITMENT FOR THE POST OF FOREST WATCHER

**(Advertisement No.1 / 2019, dated 07.03.2019 / Notification No. 1)**

*****

## எதிர்பார்ப்பு கேள்விகளும் அதற்கான பதில்களும்
## (Answers to Frequently Asked Questions- FAQs) [GENERAL]

1. **விண்ணப்பக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றை அஞ்சல் ஆணை மூலம் செலுத்தலாமா?**

   செலுத்த இயலாது. தேர்வுக்கட்டணத்தை இணைய வழி (பற்று அட்டை/கடன் அட்டை/இணைய வங்கி சேவை) மற்றும் இந்தியன் வங்கி செலுத்துச்சீட்டின் மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

   **Can the examination fee be sent through postal order?**

   No. The examination fee shall be paid either through Online (Debit Card/Credit Card/Net banking) or throughIndian Bank by Challan.

2. **நான் தமிழை பத்தாம் வகுப்பில் ஒரு பாடமாக தேர்ந்தெடுத்து படிக்கவில்லை. வனக்காவலர் தேர்விற்கு நான் விண்ணப்பிக்கலாமா?**

   விண்ணப்பிக்கலாம். ஆனால் தேர்ச்சி பெற்று பதவியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ் மொழித் தேர்வில் முழுமையான வெற்றி பெற வேண்டும்.

   **I have not studied the language "Tamil" as one of the subjects in X standard. Can I apply for the post of Forest Watcher?**

   Yes, you can apply, provided that after getting selected for appointment you should pass Second class Language Test in Tamil (full test) conducted by the TNPSC within two years from the date of appointment.

3. **முன்னாள் இராணுவத்தினர் வனக்காவலர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாமா ?**

   விண்ணப்பிக்கலாம். அப்பதவிக்கான அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கல்வித்தகுதிகள் மற்றும் வயது வரம்பு மற்றும் பிற தகுதிகள் இருந்தால் விண்ணப்பிக்கலாம். வனக்காவலர் பதவிக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு 5% செய்யப்பட்டுள்ளது.

   **Whether Ex – Servicemen can apply for the post of Forest Watcher?**

   Yes, eligible candidate can apply for the said post provided that the candidate possess the required Educational qualification, age and other requirements mentioned in the Notification. There is 5% reservation for Ex-Servicemen for the post of Forest Watcher.

4. **இணையவழித் தேர்வு எழுதிய பின்பு நான் எழுதியவற்றை நகல் எடுத்துச் செல்ல இயலுமா?**

   இயலாது.

   Is it possible to take a copy of Answer Paper after completing the Online examination?

   No.

5. **இணையவழித் தேர்வில் ஒருமுறை "SUBMIT" செய்த பிறகு மீண்டும் திருத்தமோ மாற்றமோ செய்ய இயலுமா?**

   செய்ய இயலாது.

After clicking the “SUBMIT” Button is it possible to carry out any modification in the responses in Online Examination?

No. It is not possible.

**6. தேர்வில் கணக்கீடு செய்வதற்கு தனியேதாள் வழங்கப்படுமா?**

வழங்கப்படும்.

**Whether rough sheet will be provided in the Examination Hall?**

Yes.

**7. தேர்வில் கலந்து கொள்வதற்கு நுழைவுச் சீட்டு அனுப்புவீர்களா?**

இணையவழித் தேர்வு என்பதால் நுழைவுச் சீட்டு தமிழ்நாடு வனத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் தங்களது நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**Whether Admit Card will be sent to the candidates for Online Examination?**

No. As it is an Online Examination, admit card will be uploaded in the Tamil Nadu Forest Department’s Website and candidates shall download the same.

**8. வனக்காவலர் பதவிக்கான இணையவழித் தேர்வில் எதிர்மறை மதிப்பெண் இருக்கிறதா?**

இல்லை.

**Is there is any negative marking in the Online examination?**
No

**9. வனக்காவலர் பதவிக்கான வினாத்தாள்கள் எந்த மொழியில் இருக்கும்?**

வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இருக்கும்.

**In which language the question paper would be set ?**

The questions will be both in Tamil and English languages.

**10. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களை இணைத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டுமா?**

விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஒதுக்கீடு / இன ஒதுக்கீடு ஆகியவற்றின் கீழ் இட ஒதுக்கீடு கோரும் விண்ணப்பதாரர்கள் மட்டும் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**Whether candidates need to upload the certificates along with the online application form for the TNFUSRC recruitment?**

Candidates will be required to upload community and sports certificates.

Date : 10/07/2019

Member Secretary,
TNFUSRC